இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

"அவர் அனைவரையும் வெளியேற்றிய பின், சிறுமியின் தந்தையையும் தாயையும் தம்முடன் இருந்தவர்களையும் கூட்டிக்கொண்டு, அச்சிறுமி இருந்த இடத்திற்குச் சென்றார். சிறுமியின் கையைப் பிடித்து அவளிடம், "தலித்தா கூம்" என்றார். அதற்கு, 'சிறுமி, உனக்குச் சொல்லுகிறேன், எழுந்திடு' என்பது பொருள். உடனே அச்சிறுமி எழுந்து நடந்தாள். அவள் பன்னிரண்டு வயது ஆனவள். மக்கள் பெரிதும் மலைத்துப்போய் மெய்ம்மறந்து நின்றார்கள்.' (மாற்கு 5:40-42)

# இறைமக்களே, நம்பிக்கையுடன் இறைவார்த்தையின் விதைகளை விதைப்போம்!

## திருத்தந்தை அறிவுறுத்து

**வத்திக்கான்:** கடந்த 16 ஜூன், ஞாயிறன்று, வத்திக்கானின், புனித பேதுரு பேராலயத்தின் வளாகத்தில் கூடியிருந்த பல்வேறு நாடுகளைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான திருப்பயணிகளுக்கு வழங்கிய ஞாயிறு நற்செய்தி வாசகத்தை (மாற் 4:26-34) மையமாகக் கொண்ட சிந்தனைப் பகிர்வில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நம்பிக்கையான எதிர்பார்ப்பு என்ற முக்கியமான மனப்பாங்கு குறித்து சிந்திக்க இயேசு நம்மை அழைக்கிறார் என்றும் உரைத்தார்.

### பொறுமை காப்போம்

ஒரு விவசாயி எவ்வளவுதான் நன்றாகவும் ஏராளமாகவும் விதைகளை மண்ணில் விதைத்தாலும், அவர் எவ்வளவுதான் நன்றாக மண்ணைத் தயாரித்தாலும், செடிகள் அதில் உடனடியாக முளைக்காது, அதற்கு நேரம் எடுக்கும்! ஆகவே, விதைகளை விதைத்த பிறகு, அவை சரியான நேரத்தில் முளைத்து வளர்ந்து இறுதியில் நாம் எதிர்பார்க்கும் அளவிற்கு விளைச்சளைப் பெற நாம் காத்திருக்க வேண்டியது மிகவும் அவசியம் (வச. 28-29) என்பதையும் தனது உரையில் சுட்டிக் காட்டினார் திருத்தந்தை.

### நிலத்தைப் பராமரிப்போம்

அதேவேளையில், விதைக்கப்பட்ட அந்த விதைகள் மண்ணுக்கடியில் பெரிய அளவில் வளர்ந்துகொண்டிருக்கும் அதிசயம் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றது. ஆனால், அது நம் கண்களுக்குத் தெரிவதில்லை, அதற்குப் மிகுந்த பொறுமை தேவை என்று குறிப்பிட்ட திருத்தந்தை, இதற்கிடையில், விதைகள் விதைக்கப்பட்ட மண்ணின் மேற்பரப்பில் எதுவும் நடப்பதாகத் தெரியவில்லை **என்ற போதிலும், அம்மண்கட்டிகளைப் சரியாக** பராமரிப்பது, தண்ணீர் ஊற்றுவது மற்றும் அவற்றை சுத்தமாக வைத்திருப்பது மிகவும் அவசியம்



வத்திக்கானில் ஞாயிறு மறையுரை வழங்கும் திருத்தந்தை

என்பதையும் கோடிட்டுக்காட்டினார்.

### நற்பயன் தரும் தானியக் கதிர்களாவோம்

இயேசுவின் இறையாட்சியும் இதுபோன்றது தான் என்ற திருத்தந்தை, அவர் தம்முடைய வார்த்தை மற்றும் அருளின் விதைகளை, நல்ல மற்றும் ஏராளமான விதைகளை நம்மில் விதைக்கிறார், பின்னர், எப்போதும் அவர் நம்முடன் தொடர்ந்து பயணித்து அவ்விதைகள் முளைத்தெழும்பி பயன்தரும் வரை மிகவும் பொறுமையுடன் காத்திருக்கிறார் என்றும் விளக்கினார்.

ஒரு தந்தைக்குரிய நம்பிக்கையுடன் அவர் நம்மைத் தொடர்ந்து கவனித்துக்கொள்கின்றார் என்றும், அதேவேளையில், நம்மில் விதைக்கப்பட்ட விதைகள் முளைத்து செழித்து வளர்ந்து நல்ல விளைச்சளைத் தருவதற்கான போதிய கால அவகாசத்தையும் அவர் நமக்கு வழங்குகிறார் என்றும் தெளிவுபடுத்தினார் திருத்தந்தை.

மேலும் இறையாட்சி என்னும் தனது நிலத்தில் எந்தவொரு விதையும் பலன்தராமல் போய்விடக்கூடாது என்று விரும்பி அவர் நமக்குப் கால அவகாசம் வழங்குவதால், எல்லா விதைகளுமே முழு முதிர்ச்சியை அடைகின்றன என்று எடுத்துக்காட்டிய திருத்தந்தை, நற்பயன் தரும் தானியக் கதிர்களாக நாம் வளர வேண்டும் என்று அவர் விரும்புகிறார் என்றும் தெரிவித்தார்.

### நற்செய்தியை நம்பிக்கையுடன் விதைப்போம்

அதுமட்டுமன்றி, பெற்றோராக, அருள்பணியாளர்களாக, இருபால் துறவியராக, ஆசிரியர்களாக, மறைக்கல்வியாளர்களாக, பயிற்றுநர்களாக நாம் எந்தச் சூழ்நிலையில் வாழ்ந்தாலும், நற்செய்தியை நம்பிக்கையுடன் விதைக்கக் இயேசு நமக்குக் கற்றுக்கொடுக்கிறார் என்று கூறிய திருத்தந்தை, நம்மால் விதைக்கப்பட்ட விதை வளர்ந்து நம்மிலும் பிறரிலும் பலனளிக்கும் வரை காத்திருப்போம் என்றும் அவர் திருப்பயணிகளைக் கேட்டுக் கொண்டார்.

செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

# நீலாய் , புனித திரேசம்மாள் பங்கில் தூய ஆவியில் புது வாழ்வு கருத்தரங்கு நடைபெற்றது

கடந்த ஜூன் மாதம் 1 மற்றும் 2 திகதிகளில் நீலாய், புனித திரேசம்மாள் பங்கில் 'தூய ஆவியில் புது வாழ்வு' எனும் மையக்கருத்தில் கருத்தரங்கு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. பங்குக் குருவானவரின் ஏற்பாட்டில் சிறப்பாக நடைபெற்ற இக்கருத்தரங்கு கோலாலம்பூர் மாமறைமாவட்டத்தின் அருங்கொடை பணிக்குழுவினரால் நடத்தப்பட்டது.

இக்கருத்தரங்கில் நீலாய் பங்கு மக்களும், அருகில் உள்ள இறைமக்களுமாக ஏற்குறைய 60 பேர் கலந்து பயன் அடைந்தனர். பங்குத்தந்தை கிறிஸ்தோபர் அவர்களின் ஆசியோடு கோலாலம்பூர் மாமறைமாவட்ட தமிழ் அருங்கொடை பணிக்குவின் தலைவர் சகோ. தேரண்ஸ் டேனியேல் அம்புரோஸ் அவர்களின் தலைமையில் சகோ. மைக்கல் அந்தோணி, சகோ. அருமை தோமஸ், சகோ. பெர்சியுஸ் ஜேம்ஸ், சகோ. தேரன்ஸ், சகோ. சில்வஸ்தர் மைக்கல் மற்றும் சகோ. பிலிப் சின்னப்பன் ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் சொற்பொழிவு வழங்கி மக்கள் இறை அனுபவம் பெற உதவி செய்தார்கள். இந்நிகழ்வில் ஒவ்வொரு பகிர்வுக்குப் பின்னும் குழு கலந்துரையாடல் நடத்தப்பட்டது. மக்கள் குழு பகிர்வில் தாங்கள் கேட்ட சொற்பொழிவையொட்டி கலந்துரையாடினர். நீலாய் பங்கிஇன் தமிழ் அப்போஸ்தல பணிக்குழு பொறுப்பார் திரு.நோபல் தாஸ் அவர்கள் பங்கு இளைஞர்களோடு இணைந்து இந்நிகழ்வை சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.

நிறைவாக, பங்குத் தந்தை திருப்பலி கொண்டாடி, இறைஅசீர் வழங்கினார். பங்குப் பெற்ற மக்கள் தங்களின் இறை அனுபவத்தைச் சாட்சியமாக கூறி கடவுளை மாட்சிபடுத்தினார்.

*-அருமை தோமஸ், சிரம்பான்*



அருங்கொடை கருத்தரங்கில் பங்குபெற்றோர்

# பினாங்கு மறைமாவட்டத்தின் 39-ஆம் ஆண்டு தமிழ் அருங்கொடை மாநாடு 2024

**பினாங்கு:** 'மண்ணுலகிற்கு உப்பாகவும் உலகிற்கு ஒளியாகவும்' என்ற கருப் பொருளில் கூட்டொருங்கியக்க திருஅவையில் ஒன்றிப்பு, பங்கேற்பு மற்றும் மறைத்தூது' ஆகியவற்றைத் தழுவிய ஆழ்ந்த ஆன்மீகம், வழிபாடு, குணப்படுத்துதல், இறைவேண்டல் போன்ற சிறப்பு அம்சங்களோடு, மேற்கண்ட அருங்கொடை மாநாடு கடந்த ஜூன் திங்கள் 3-ம் திகதி, அன்னை மரியா பிறப்பு ஆலயத்தில் நடந்தேறியது.

தமிழகத்தைச் சேர்ந்த அருள்பணி வர்கிஸ் பரேக்கத்தில் VC அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த அருங்கொடை எழுச்சி தியானத்தில் பங்குத்தந்தை தோமினிக் சந்தியாகு. பினாங்கு, தமிழ் ஒருங்கிணைப் புக் குழுச் செயலர் சகோ. செபஸ்தியன்



பிள்ளை, பினாங்கு அருங்கொடை பணிக்குழு தலைவர் செல்வி எடிலின் தே மற்றும் தமிழ் ஒருங்கிணைப்புக் குழு பொறுப்பாளர் சகோ.ஜேசுதாஸ் ஆகியோருடன் தீபகற்ப மலேசியாவின் மூன்று மறை மாவட்டங்களில் இருந்து 1,300 பங்கேற்பாளர்களும் கலந்து கொண்டனர்.

கத்தோலிக்கர்கள் கொண்டிருக்க வேண்டிய ஆன்மீகத்தையும் நம்பிக்கையையும் உறுதிப் படுத்த மறைநூலில் இருந்து அருள்பணி வர்கீஸ் அவர்கள் ஏசாயா 43:1-4 ல் கூறப்பட்டுள்ளபடி இறைவாரத்தைப் பகுதி யைச் மேற்கோள்காட்டி உரையாற்றினார். தற்காலத்தில், நல்ல கத்தோலிக்க வாழ்வுக்கு பெரும் சவாலாக விளங்கும் சுயக்கட்டுப் பாடு, மன்னிப்பு, ஆசை, நம்பிக்கை மற்றும் சுதந்திரம் குறித்து தந்தை அவர்கள் பங்கேற்றோருக்கு விவரித்தார்.

"கடவுளின் சாயலில் நாம் படைக்கப் பட்டுள்ளோம் - கடவுளுக்கு ஒரு முகம் உள்ளது, அதை அன்பின் மூலம் நம்மால் பார்க்க முடியும்" என்று மீண்டும் மீண்டும் மேற்கோள் காட்டியது, கடவுளின் குழந்தையாக, இயேசுவின் முகத்தில் உள்ள அன்பை வெளிப்படுத்தும் சாட்சிகளாக நாம் வாழ வேண்டும் என்பதை நினைவூட்டினார். தொடர்ந்து, அருட்தந்தை அவர்கள் மத்தேயு 5:23-ல் காணப்படும் வசனத்தைக் கொண்டு, நாம் கடவுளுடன் தொடர்பு கொள்வதற்கு முன் நம் மத்தியில் நிலவ வேண்டிய நல்லிணக்கத்தின் அவசியத்தை வலியுறுத்தி னார். மேலும், யோவான் 13:34-ல் உள்ளபடி 'நான் உங்களிடம் அன்பு செலுத்தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங்கள்' என்ற பொன்மொழியைச் சுட்டிக்காட்டி அன்பின் மேன்மையை எடுத் தியம்பினார். தொடர்ந்து, அருள்பணி வர்கீஸ் அவர்கள் பங்கேற்றோரிலும், நம்மைச் சுற்றிலும் கடவுளின் உடனிருப்பை அனுப வித்து குணப்படுத்துதல், ஆராதனை, நற்கருணை ஆசீர்வாதம் ஆகியவற்றோடு நிகழ்வைச் சிறப்பு செய்தார்.

நிறைவாக, நமது கர்தினால் செபஸ்தியன் பிரான்சிஸ் தலைமையில் அருள்பணியா ளர்கள் வர்கீஸ், பிரான்சிஸ் சேவியர், லூயிஸ் லோய், மார்டின் அருளாந்து ஆகியோர் பங்கேற்ற நிறைவு கூட்டுத் திருப்பலி கொண்டாடப்பட்டது. மற்றும் அருங் கொடை பணிக்குழுவின் ஆன்மீக ஆலோசகர் லூயிஸ் லோய், அருள்பணி வர்கீஸ் அவர் களின் வருகைக்கும் சிறப்பு சொற் பொழிவுக்கும் நன்றி நவில்ந்தார். தொடர்ந்து



செயலர் சகோ. செபஸ்தியன் பிள்ளை அவர்கள் அருள்பணி வர்கீஸ் அவர்களின் வருகைக்கும் தொடர்ந்து பங்கு களில் அவர் ஆற்றவுள்ள சொற் பொழிவு களுக்கும் நன்றி நவில்ந்தார். கர்தினால் அவர்களின் இறுதி ஆசீருடன் எழுச்சி மாநாடு ஒரு முடிவை எய்தியது.

-- தமிழ் அருங்கொடை ஒருங்கிணைப்பு குழு

**திருத்தந்தையின் ஜூலை மாத இறைவேண்டல்**

**நோயுற்றோரின் மெய்ப்புப்பணி பராமரிப்புக்காக**

நோயிற்பூசுதல் அருளடையாளமானது அதை பெறுபவர்களுக்கும் அவர்களின் அன்புக்குரியவர்களுக்கும் இறைவனின் ஆற்றலை வழங்கவும், மேலும் அது அனைவருக்கும் இன்னும் கண்ணுக்குப் புலப்படும் இரக்கத்தின், எதிர்நோக்கின் அடையாளமாக மாறவும் மன்றாடுவோமாக.

# மலாக்கா– ஜோகூர் மறைமாவட்டத்தின் 33வது தமிழ் அருங்கொடை எழுச்சி மாநாடு

குளுவாங்: கடந்த 8.6.2024 அன்று, இங்குள்ள புனித பிரகாசியார் ஆலயத்தில், மலாக்கா-ஜொகூர் மறைமாவட்டத்தின் 33வது அருங்கொடை எழுச்சிக் கூட்டம்



எழுச்சி பொங்க உரை நிகழ்த்தும் அருள்பணி ஜோர்ஜ் ஹெரிசன்

நடைபெற்றது. இந்த அருங்கொடை கூட்டத்தை அருள்பணி ஜோர்ஜ் ஹெரிசன் அவர்கள் தலைமைத் தாங்கி சிறப்பாக வழிநடத்தினார்.

விவிலிய ஆராதனை, இறை புகழ்ச்சி, இறைவேண்டல் ஆராதனை, நடனம் ஆகியவற்றோடு எழுச்சிக்கூட்டம் துவங்கப் பட்டது. பொறுப்புக்கள் அனைத்தும், பங்கு இறைமக்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப் பட்டது.

தூய ஆவியாரின் வழி நடத்துதல் மூலம் அனுபவ ரீதியாக இறை உடனிருப்பை இங்கே உணர முடிந்தது. இன்றைய நவீன உலகில் மீட்பின் திட்டத்தில், எவ்வாறு தூய ஆவியாரின் குரலுக்கு செவிமடுப்பது. அத்தோடு, தூய ஆவியின் தூண்டுதல், ஆற்றல் இவற்றின் ஈடுபாட்டின் முக்கியத் துவத்தையும் அருள்பணி ஜோர்ஜ் ஹெரிசன் எடுத்துரைத்தார்.

நாம்தான் கிறிஸ்துவின் விளம்பரம் என்பதை எடுத்துரைத்து நமது நம்பிக்கை யில் எவ்வாறு வெளிப்படுத்துவது என்பதை வலியுறுத்தியவர், ஆன்மீக ரீதியில் என்ன உடுத்துகிறோம் எனும் கேள்வியை எழுப்பியவர், கிறிஸ்துவின் ஆடையைக் குறிப்பிட்டு நம்பிக்கையில் தூய ஆவியின் வழிநடத்துதல், உடனிருப்பு, ஆற்றல் ஆகியவற்றைக் கவசமாக அணிந்து உயிருள்ள சாட்சியாக இருத்தலின் அவசியத்தை வலியுறுத்தினார்.

கூட்டொருங்கியகத் திருஅவையையும் தொட்டுப் பேசி தெளிவுபடுத்தியவர், ஒவ்வொருவரின் பங்கெடுப்பும் ஈடுபாட் டையும் வலியுறுத்தி திருஅவையின் பணிகளில் பங்கேற்க அழைப்பும் விடுத்தார். அவரவர் தாலந்துக்கு ஏற்ப பணிகளை பகிர்ந்து, அறுவடையோ மிகுதி வேலையாட்களோ குறைவு இதை உணர்ந்து நமது நம்பிக்கையின் பயணம் இருத்தல் வேண்டும் என பகிர்ந்து கொண்டார்.

அருள்பணியாளர்கள் Msgr. பீட்டர் இங், ஜேம்ஸ் இராஜேந்திரன், சிரில் மண்ணாயகம், எட்ரியன் பிரான்சிஸ், வழிநடத்துனர் ஜோர்ஜ் ஹெரிசன் மற்றும் திருத்தொண்டர்கள் நால்வர் தங்களது பங்கை சிறப்பாகவே செய்தனர். இப்பணிக்குழுவிற்குத் திருத்தொண்டர் ஓபிக் அவர்கள் ஆன்மீக ஆலோசகராக இருந்து வருகிறார் என்பது மேலும் குறிப்பிடத்தக்கது.

மறைமாவட்டத்தின் பல பங்குகளிலிருந்து ஏறக்குறைய 500பேர் கலந்து கொண் டனர் என்பது குறிப்பிடத்தக்கது. நற்கருணை ஆராதனை, குணமளிக்கும் சடங்கோடு இறை ஆசீருடன் நிகழ்ச்சி நிறைவு பெற்று ஆன்மீக உணர்வோடு பங்கேற்றோர் இல்லம் திரும்பினர்.

-மார்க் மரியதாஸ். கூலாய்.

# நம்பிக்கை நாயகனில் நம்பிக்கை நிலைபெறட்டும்!

இன்று ஆண்டின் பொதுக்காலத்தின் 13 ஆம் ஞாயிறு. இன்றைய முதல் வாசகம் சாலமோனின் ஞானநூலில் கடவுளின் மாபெரும் அன்பைப் பற்றி நமக்கு அறிவூட் டுகிறது. சாவைக் கடவுள் உண்டாக்க வில்லை. படைப்புகள் அனைத்தும் மகிழ்ந்திருக்கவே அவர் அனைத்து உயிர்களையும், மேலும் மனிதனையும் அவரின் சாயலாப் படைத்தார். கடவுள் நமக்கு தேர்ந்தெடுக்கும் உரிமையைக் கொடுத்துள்ளார். எனவே பெரும்பாலான மக்கள் கூறுவதுபோல, இந்த பூமியின் தற்போதையை நிலை அல்லது துன்பம் அனைத்தும் மனிதனின் தேர்வே அன்றி கடவுள் நமக்குக் கொடுத்தது அல்ல என்றுஅன்றைய வாசகம் தெளிவுப் படுத்துகிறது.

கொரிந்தியருக்கு எழுதிய மடலில் புனித பவுல் நம்மிடம் மிகுந்திருக்கும் செல்வத்தை இல்லாதவரோடுப் பகிர்ந்துகொள்ளுமாறு அறிவுறுத்துகிறார். ஏனென்றால் இறைவன் படைத்த இவ்வுலகம் பொருள் இருப்ப வருக்கே முழு உரிமை என்பதுபோல் ஏழைகள் இன்னும் ஏழையராகவும், செல்வர் இன்னும் பொருளை அனுபவிப் பராகவே இருப்பதை நாம் காண்கிறோம். இயேசு காட்டிய பிறர் அன்பு என்னும் கட்டளையை அவரைப் பின்பற்றும் ஒவ்வொருவரும் கடைப்பிடித்தால், இல்லாமை என்னும் நோய் இல்லாமலே போய்விடும் என்கிறார்.

இன்றைய நற்செய்தி மிக நீண்டதாக இருந்தாலும், அரிய நிகழ்ச்சியை நம்



கண்முன் கொண்டுவருகிறது. பன்னிரண்டு என்பது மிகவும் குறிப்பிடத்தக்க எண்ணாக நம் இறைவார்த்தைகளில் காண்கிறோம். இளவயது பெண் வாழ்க்கையைத் தொடங்குமுன் இறக்கும் தருவாயில் இருக்கிறார். பன்னிரண்டு ஆண்டுகளாய் நோயுற்றிருந்த பெண்ணும் சமுதாயத்தில் வெளிப்படையாக வர இயலாதவராய் இருக்கிறார். "நான் அவருடைய ஆடை யைத் தொட்டாலே நலம் பெறுவேன்" என்ற நம்பிக்கை அவரை முழுமையாக குணப்படுத்தியது. அதேபோல தொழு கைக்கூடத் தலைவர் இயேசுவிடம் " நீர் வந்து அவள் மீது உம் கைகளை வையும், .. நலம் பெற்றுப் பிழைத்துக்கொள்வாள். என்று இயேசுவின்மீது முழு நம்பிக்கை வைத்தார். இரண்டு அருளடையாளங்களின் போதும் இயேசு கூறியது: "நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று, நம்பிக்கையை மட்டும் விடாதீர்"

இன்றைய வாசகங்கள் நமக்கு சுருங்கக் கூறுவது; நம்பிக்கை. அது நம்முடைய தேர்வு. கடவுளும் மனிதனைப் படைக்க

**பொதுக்காலம்-13-ஆம் ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | சா.ஞான 1:13-15; 2:23-24 |
| திரு.பாடல் | 30: 1,3. 4-5. 10,11a,12b |
| 2-ம் வாசகம் | 2கொரி 8: 7,9,13- |
| நற்செய்தி | மாற்கு 5: 21-43 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 1**

பின், நன்மை தீமையை தேர்ந்தெடுக்கும் உரிமையை நம்மிடமே கொடுத்துவிட்டார்.

ஆகவே, இந்த இரு நிகழ்வுகளில் நாம் அதே ஆழமான நம்பிக்கையும், அதே அர்ப்பணிப்பும் இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறோம். இயேசுவிடம் நம் வாழ்க்கையுடன் திரும்ப வேண்டும். அவரில் வைக்கும் நம்பிக்கையே நமது வாழ்வாக மாற வேண்டும்.

*-ஜோசப்பின் போஸ்கோ, சிரம்பான்,*